ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,255 — 1964 දෙසැම්බර් 11 වැනි සිකුරාදා — 1964.12.11

14,255 ம் இலக்கம்—1964 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 11 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 373 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 374 | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | 375 | நானாவித அறிவித்தல்கள்.. .. .. | — |


## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### மத்திய எழுது வினைஞர் சேவை சோதினை—செப்டம்பர், 1962

1964 ம் ஆண்டு யூலை மாதம் 3 ம் திகதியுடைய 14,108 ம் இலக்கமுடைய அரசாங்கச் செய்தி மடலில் உள்ள அறிவிப்பைத்தொடர்ந்து அறிவிப்பது என்னவென்றால் 1962 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடைபெற்ற மத்திய எழுது வினைஞர் சோதினையின் படி கீழ்க்காணும் அபேட்சகர்களை புகையிரதப் பகுதி பொதுத்தர எழுதுவினைஞர் சேவைக்கு நியமனம் பண்ண தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்—

| | பெயர் | விலாசம் |
|---|---|---|
| 1. | அபயரத்தின பண்டா, டபிள்யு. எம். | கோனதேனி, அந்தசா. |
| 2. | அமரசேகரா, பி. சி. | உள்நாட்டு வரி அலுவலகம், கொழும்பு 1 |
| 3. | என்ரிக்கஸ், ஜி. எம். | 151/1, மாளிகாவத்தை வீதி, மருதானை, கொழும்பு 10 |
| 4. | கதிரேசு, எஸ். | புத்தலை, புலோலி தெற்கு, பருத்தித்துறை |
| 5. | குணசிரி, என். டி. | 128, கொலனவ வீதி, வெல்லம்பிட்டியா |
| 6. | டி சில்வா, எச். எஸ். டபிள்யு. | இலக்கம் 131, எகலியகொடை |
| 7. | சுமனதாசா, ஏ. எம். | 80, போவல, அங்கம்பிட்டியா, கண்டி |
| 8. | பெர்ணந்து, எச். ஈ. ஜீ. | 754, கடலன, மொரட்டுவா |
| 9. | பெர்ணந்து, எல். எச். என். பி. | இலக்கம் 431, அங்குலானை, மொரட்டுவா |
| 10. | பெர்ணந்து, டபிள்யு. சி. ஈ. | 76, செனநாயகா வீதி, நாவல, ராஜகிரியா |
| 11. | பிரேமதாசா, என். பி. | " திலகா ", மகாபிட்டியா, பொத்துகர |
| 12. | ஜயசூரியா, சீ. சீ. | கண்டலமா, மிரிகாம |
| 13. | ஜயடிஸ்ஸா, ர. எம். | ரப்பர் கட்டுபாட்டு அதிகாரி, பெல்மதுல்ல |
| 14. | மானுவேல், எம். | " செனசில்ல ", நடங்கோடப்பலுவா, ராகம |
| 15. | மாரசிங்க, எம். எம். சி. | நாலவலை, கோணவில |

2. இவ்வபேட்சகர்களுக்கு உடனே பதவிகள் கொடுக்க அரசாங்கம் பொறுப்பேற்கமாட்டாது. ஆனால் காலி இடங்கள்வர பதவிகள் கொடுக்கப்படும் நியமனங்கள் மூன்று வருடங்களுக்கு தகுதிகாண் நிலையில் வைத்திருக்கப்படும். இவர்கள் வைத்தியப்பரீட்சைக்கும் புகையிரதப்பகுதி எழுதுவினைஞர் சேவைக்குரிய நிபந்தனைகளுக்கும் கட்டுப்படவேண்டும்.

3. அபேட்சகர்களுடன் புகையிரதப்பகுதி பொதுத்தலைவர் கடிதத் தொடர்பு வைப்பார்.

பொதுத்திறைச்சேரி,
கொழும்பு,
1964 ம் ஆண்டு திசெம்பர் மீ 2 ந் உ.

டீ. சீ. எல். அமரசிங்க,
திறைச்சேரி மேலதிக பிரதிச் செயலாளர்.

12–489—11.12.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,255

## முக்கிய விளம்பரம்

*1964 ம் ஆண்டு மார்கழி (திசெம்பர்) மாதம் 25 ந் திகதி வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை யாக இருப்பதால் 1964 ம் ஆண்டு மார்கழி (திசெம்பர்) மாதம் 24 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1964 ம் ஆண்டு மார்கழி (திசெம்பர்) மாதம் 19ம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

*பேர்னட் த சில்வா,*
*அரசாங்க அச்சகத் தலைவர்.*

*அரசாங்க அச்சகம்,*
*கொழும்பு,*
*1964 ம் ஆண்டு மார்கழி (திசெம்பர்) மீ 4 ந் உ.*

இல. 1/83/12(ஜீ)

## மாற்றத்துக்குரிய சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்ப் பிரிவு சுருக்கெழுத் தாளருக்காக, 1964 ஏப்ரல் மாதம் நடாத்தப்பட்ட, சேவையில் உறுதிப்படுத்தப்படும் (தமிழ்) பரீட்சை

1964 ஏப்ரல் மாதம் 18ந் திகதி நடாத்தப்பட்ட மாற்றத்துக்குரிய சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்ப்பிரிவுக்குரிய சுருக்கெழுத்தாளரின் நியமனங்கள் உறுதிப்படுத்துவதற்காக தகைமை பெறும் பரீட்சையில், தகுதிகாண்/பரீட்சை சேவைக் காலத்துக்கு நியமனம் பெற்றிருக்கும் கீழே குறிக்கப்பட்ட சுருக்கெழுத்தாளர், அவரின் பெயருக்கு நேரே குறித்த பாடத்தில் சித்தியெய்தியுள்ளார்.

| பெயர் | பகுதி | பாடம் |
|---|---|---|
| நடராசா, சி. க. | வானொலி தகவல் | சுருக்கெழுத்து |

தொ. சா. ல. அமரசிங்க,
திறைசேரி மேலதிகப் பிரதிச்செயலாளர்.

பொதுத் திறைசேரி, கொழும்பு,
1964 ம் ஆண்டு மார்கழி மீ 7 ந் வ.

12-540/3—11.12.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,255

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசனத் திணைக்களம்

செங்கலடி உப பிரிவிலுள்ள தொடிவில் ஆறு அணைக்கட்டிற்குப் போவதற்கான பாதை அமைப்பதற்கு கேள்விப்பத்திரங்கள் மட்டக்களப்பிலுள்ள பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் 1965 ம் ஆண்டு தை மாதம் 5 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அதன் பின்பு உடனே திறக்கப்படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் 30,000/- ரூபாவுக்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இக்கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்க தகுதியுடையவராவர்.

3. இக் கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் செங்கலடி உப பிரிவிலுள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் 1965 ம் ஆண்டு தை மாதம் 1 ம் திகதி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விவரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப் பத்திரங்கட்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா வென்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப்பத்திரம் வழங்கமுன் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் 50/- ரூபா கேள்விக்கட்டணமாக செலுத்தப்படவேண்டும். இக் கேள்விக்கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

4. இக் கேள்வியைப் பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

சு. இராசேந்திரம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
செங்கலடி உப பிரிவு, த.ம.

செங்கலடி உப பிரிவு,
1964 ம் ஆண்டு மார்கழி மீ 3 ந் வ.

12-555—11.12.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,255

## கூற்றுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம்

தீவு பூராவும் கீழ் விபரிக்கப்பட்ட மாதிரி எல்லாவிதப் பொருட்களையும், ஏற்றிச் செல்வதற்கு முத்திரிக்கை வைத்த கேள்விப் பத்திரங்களை, கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபன, ஜெனரல் மானேஜர் (விநியோகம்) ஏற்றுக்கொள்வார்.

(அ) கொழும்பிலும், வெலிசறையிலும் உள்ள கிடங்களிலிருந்து தீவடங்குமுள்ள வெளியூர் விற்பனை நிலையங்களுக்கு ஏற்றிச் செல்லல்.

(ஆ) புகையிரத நிலையங்களிலிருந்து, புகையிரத நிலையங்களுக்கு அண்மையிலுள்ள மாகாண விற்பனை நிலையங்களுக்கு ஏற்றிச் செல்லல்.

(இ) மாகாண விற்பனை நிலையங்களிலிருந்து, மாகாண விற்பனை நிலையங்களுடன் இணைக்கப்பட்டுள்ள மற்றைய விற்பனை நிலையங்களுக்கு ஏற்றிச்செல்லல்.

சித்தியெய்திய கேள்விப் பத்திரக்காரர்கள் இந்த ஸ்தாபனத்தில் நிரந்தர கொந்தராத்துக்காரர்களாக பதிவு செய்யப்படுவதுடன், தொடர்ந்து வேலை அளிக்கப்படுவார்கள். கேள்விப்பத்திரக்காரர்கள் ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வெளியூர் விற்பனை நிலையங்களில், அவர்கள் தகுதிக்கமைய ஏற்றுமதிசேவைகளுக்கு கேள்வி கோர தகுதியுடையவராவர்.

முழுவிபரங்களும், கேள்விப்பத்திர பாரங்களும், கேள்விப்பத்திரம் பற்றிய நிபந்தனைகளும் விண்ணப்பத்தின் பேரில் மானேஜர் வீ. டபிள்யூ. ஈ. ட்ரான்ஸ்போர்ட் மோட்டார் இலாகா, இல. 85, மக்கலம் ரோட், கொழும்பு 10, என்ற விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திர பாரங்கள் 1964 டிசம்பர் 29 ந் திகதி நண்பகல் 12 மணி வரையும் வழங்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளுதல் 1964 டிசம்பர் 30 ந் திகதி பி. ப. 2 மணியுடன் முடிவடையும்.

ஜெனரல் மனேஜர்,
(விநியோகம்.)

கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம்,
இல. 21, வாக்ஷல் வீதி,
கொழும்பு 2.

12-435—11.12.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,255

## கிழக்குப் பகுதிக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்
## நியூஸ்பிரிண்ட் கடதாசிகளுக்கான கூறுவிலை

1,000 தொன் வெள்ளை நியூஸ்பிரிண்ட் தாள்களை விநியோகம் செய்வதற்கு வெளிநாடுகளிலுள்ள பிரதான வியாபாரிகளிடமிருந்து நேரடியாக கேள்விகள் கோரப்படுகின்றது. ஒரு ரீமில் 500 தாள்கள் கொண்டதாகவும், 22½" × 35" அளவும், 50–52 கிறும்ஸ்/சதுர மீற்றர் எடை கொண்டதாகவும் இருக்க வேண்டும். 500 தொன்களாக முறையே ஜனவரியிலும், பெப்ரவரியிலும் கப்பலிலேற்ற வேண்டும். இதற்குரிய பணம் நாணயக் கடிதமூலம் செலுத்தப்படும்.

எழுத்துமூலமான இவ்விபரங்களை உறையிலிட்டு மெழுகிட்டு அவ்வுறையின் மேற்புற இடது மூலையில் " நியூஸ்பிரிண்ட் விநியோகம் செய்வதற்கான கேள்விகள் " எனக் குறிப்பிட்டு, தலைவர், கிழக்குப் பகுதிக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம், 70, யோர்க் வீதி, கொழும்பு 1, இலங்கை, என்ற விலாசத்துக்கு 1965 ம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ந் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்போ கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டும்.

தந்தி மூலம் வரும் கோரிக்கைகள் " ஈபிஎம்கோர்ப் ", கொழும்பு, இலங்கை, என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

கேள்விகள் மூடப்படும் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ உங்களின் விண்ணப்பத்துக்கான " மாதிரிக் கடதாசிகளையும் " அனுப்ப வேண்டும்.

தலைவர்,
கிழக்குப் பகுதிக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

70, யோர்க் வீதி, கொழும்பு 1,
1964 ம் ஆண்டு டிசெம்பர் மீ 7 ந் வ.

12-594/1—11.12.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,255

## கிழக்குப் பகுதிக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

*அரசாங்க அச்சகத்திலும், மற்றுமிடங்களிலும் கிடைக்கும் கழிவுக் காகிதங்களை வாழைச்சேனைக்கு அனுப்புவதற்காக, அவற்றை கட்டுதல், கொண்டு செல்லல், சுமை வண்டியில் ஏற்றுதல் ஆகிய சேவைக்கான கூறு விலையும், அத்துடன்*

(2) செய்து முடிக்கப்பட்ட பொருட்களை வாகனங்களிலிருந்து இறக்குதல், அரசாங்க அச்சகம், அரசாங்க பண்டகசாலை என்பவற்றில் சேகரித்து வைப்பதற்குமான கூறு விலையும் கோரப்படுகின்றன.

கூறுவிலையில் தொழிலாளர் கூலி உட்பட ஒரு தொன்னுக்கு என்ன விகிதம் என்று குறிப்பிட வேண்டும். கூறு விலையானது உறையிலிட்டு, மெழுகிட்டு அவ்வுறையின் மேற்புற இடது பக்க மூலையில் "கழிவுக் காகிதம், கட்டுதல், கொண்டு செல்லல், ஏற்றியிறக்கல் என்பவற்றிற்கான கூறுவிலை" எனக் குறிப்பிட்டு தலைவர், கிழக்குப் பகுதிக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம், 70, யோர்க் வீதி, கொழும்பு 1, என்ற விலாசத்திற்கு 1964 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29 ந் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டும்.

தலைவர்,
கிழக்குப் பகுதிக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

70, யோர்க் வீதி, கொழும்பு 1,
1964 ம் ஆண்டு டிசெம்பர் மீ 7 ந உ.

12-594/2—11.12.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,255

---

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## பொலீஸ் பகுதி

### விற்பனைக்கு

மட்டக்களப்பில் கிழக்குப்பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் பண்டகசாலையிலிருந்து பழைய உத்தியோகத்த உடை, சப்பாத்துக்கள், தொப்பிகள், மழைக் கோட்டுகள், சயிக்கிள்கள் ஆகியவை 1964 ம் ஆண்டு மார்கழி மாசம் 22 ந் திகதி முற்பகல் 10 மணியளவில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மேற்கூறிய பொருட்களை அன்று (22.12.64) காலை 8 மணி தொடக்கம் பார்வையிடலாம்.

விற்பனை முடிந்தவுடனே பொருட்களுக்குரிய முழுப் பணமும் கட்டப்படல் வேண்டும்.

கே. வீ. ராமனுதன்,
பொலீஸ் அத்தியட்சகர், கிழக்குப்பிரிவு,
மட்டக்களப்பு.

1964 ம் ஆண்டு நொவம்பர் மீ 30 ந உ.

12-347—11.12.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,255

---

*வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

*வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.*

*அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.*

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.